ஜூன் 24 முதல் குறுவை பயிர்க் காப்பீடு பதிவு

வேளாண் அமைச்சர் தகவல்

சென்னை, ஜூன் 17: குறுவை பருவத்துக்கான பயிர்களை காப்பீடு செய்யும் பணி வரும் 24-ஆம் தேதி முதல் தொடங்கப்படவுள்ளதாக வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

டெல்டா விவசாயிகளுக்கான குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம் அரசின் ஏமாற்று நாடகங்களில் ஒன்று என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி, கூறியிருந்தார். இதற்கு பதிலளித்து அமைச்சர் பன்னீர்செல்வம் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வோர் ஆண்டும் குறுவை தொகுப்பு திட்டத்தை அறிவித்து வருகிறது. இந்தத் திட்டத்துக்காக 2021-22 ஆம் ஆண்டில், ரூ.69.06 கோடியும், 2022-23 ஆம் ஆண்டில், ரூ.61.12 கோடியும், 2023-24 ஆம் ஆண்டில், ரூ.75.95 கோடியும் வழங்கியுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தை செயல்படுத்தியதன் வாயிலாக 9,46,442 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். குறுவைதொகுப்புத்திட்டம் கடந்த 3 ஆண்டுகளாக செயல்படுத்தியதன் பயனாக கடந்த ஆட்சிக்காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவை விட தற்போது, இந்த திமுக அரசு பொறுப்பேற்ற காலத்தில் 1.47 லட்சம் ஏக்கர் பரப்பளவு கூடுதலாக சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், இந்த கூடுதல் பரப்பு மூலம் நெல் உற்பத்தி சுமார் 2 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்ந்துள்ளது.

மேலும், இந்த ஆண்டில் இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து பாதுகாத்திட ரூ.1,775 கோடி ஒதுக்கீட்டில் பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்த ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் குறுவை பருவம் உள்பட சம்பா மற்றும் கோடை பருவங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். வரும் 24 ஆம் தேதி முதல் குறுவை பருவத்துக்கான விவசாயிகள் பதிவு, தேசிய பயிர் காப்பீட்டு இணையதளத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் மூன்றாண்டுகளில் 7 கோடி நாப்கின் பாக்கெட்டுகள் விநியோகம்

சென்னை, ஜூன் 17: தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் பள்ளி மாணவிகளுக்கு 7.74 கோடி பாக்கெட்டுகள் சானிட்டரி நாப்கின் வழங்கப்பட்டுள்ளதாக பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இதற்காக ஆண்டுதோறும் ரூ.115 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் விலையில்லா சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு கடந்த 2011-ஆம் ஆண்டில் தொடங்கியது. இந்த திட்டத்தின் கீழ் பருவமடைந்த மாணவிகள், பெண்களுக்கு அரசு பள்ளிகள், அங்கன்வாடிகள் மூலம் சானிட்டரி நாப்கின் வழங்கப்பட்டு வருகிறது. 10 வயது முதல் 19 வயது வரையிலான மாணவிகள் 43 லட்சம் பேர் ஆண்டுதோறும் இத்திட்டத்தில் பயனடைந்து வருகின்றனர்.

அதேபோன்று பயன்படுத்திய நாப்கின்களை துப்புரவாக அப்புறப்படுத்துவதற்கான இயந்திரமும் பள்ளி வளாகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பொது சுகாதாரத் துறை இயக்குநர் செல்வவிநாயகம் கூறியதாவது:வளரிளம் பருவத்தில் உள்ள மாணவிகளின் சுகாதாரத்தை பேணும் வகையில் இத்திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் வாயிலாக லட்சக்கணக்கான மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளில் பள்ளி மாணவிகளுக்கு 7.74 கோடி பாக்கெட்டுகள் சானிட்டரி நாப்கின் வழங்கப்பட்டுள்ளன.மற்றொருபுறம் அரசு மருத்துவமனைகளில், பிரசவித்த பெண்களுக்கும் இலவசமாக நாப்கின்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் மூலமாக அவை கொள்முதல் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் இதற்காக ரூ.115 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாநிலம் முழுவதும் இத்திட்டத்துக்கு நல்ல வரவேற்பு உள்ளது என்றார் அவர்.

குண்டர் சட்டத்தில் 26 பேர் கைது

சென்னை, ஜூன் 17: சென்னையில் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த ஒரு வாரத்தில் 26 பேர் கைது செய்யப்பட்டனர்.

சென்னையில் குற்றங்களை குறைக்க காவல்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக கடந்த ஜனவரி மாதம் தொடங்கி ஜூன் 16-ஆம் தேதி குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் 677 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 10-ஆம் தேதியில் இருந்து 16-ஆம் தேதி வரையிலான 7 நாள்களில் இரு பெண்கள் உள்பட 26 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய அளவிலான துப்பாக்கி சுடும் போட்டி

பெண் காவலர்களுக்கு பரிசு: டிஜிபி வழங்கினார்

சென்னை, ஜூன் 17: தேசிய அளவிலான பெண் காவலர்களுக்கிடையேயான துப்பாக்கி சுடும்போட்டியில், வெற்றி பெற்றவர்களுக்கு தமிழக காவல்துறை தலைமை இயக்குநர் (டிஜிபி) சங்கர் ஜிவால் பரிசு வழங்கினார்.

தமிழக காவல்துறை சார்பில் அகில இந்திய அளவிலான பெண் போலீஸாருக்கு இடையேயான துப்பாக்கி சுடும் போட்டி சென்னை ஒத்திவாக்கத்தில் உள்ள அதிரடிப்படை துப்பாக்கி சுடும் பயிற்சி மைதானத்தில் கடந்த 15-ஆம் தேதி முதல் நடைபெறுகிறது.

இந்தப் போட்டியில் மாநில காவல் துறை, மத்திய காவல் அமைப்புகளிலிருந்து 30 அணிகளைச் சேர்ந்த 453 பேர் பங்கேற்றனர். திங்கள்கிழமை நடைபெற்ற கைத்துப்பாக்கி 40-30 கஜம் போட்டியில் தமிழக காவல்துறையைச் சேர்ந்த தலைமைக் காவலர் பாரதி முதலிடத்தையும், அஸ்ஸாம் ஆயுதப்படையைச் சேர்ந்த காவலர் ஜூலியா தேவி இரண்டாமிடத்தையும்,தமிழக காவல் துறையைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் சுதா மூன்றாமிடத்தையும் பிடித்தனர்.

துப்பாக்கி சுடும் போட்டியில் வெற்றி பெற்ற பெண் காவலர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்களை திங்கள்கிழமை வழங்கிய தமிழக காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால்.

ரைபிள் 300 கஜம் ப்ரோன் போட்டியில் முதலிடத்தை அஸ்ஸாம் காவல்துறையைச் சேர்ந்த காவலர் பிரியங்கா போரோ முதலிடத்தையும், அஸ்ஸாம் ஆயுதப்படையைச் சேர்ந்த காவலர் திவ்யா சைனி இரண்டாமிடத்தையும், இந்தோ-திபெத் எல்லை காவல் படையைச் சேர்ந்த காவலர் மம்தா ஒலி மூன்றாமிடத்தையும் பிடித்தனர்.

கைத்துப்பாக்கி 50 கஜம் ஸ்னாப் போட்டியில் எல்லை பாதுகாப்புப் படை காவலர் பாராமிலா முதலிடத்தையும்,கர்நாடக காவல்துறையைச் சேர்ந்த டிஎஸ்பி நிகிதா இரண்டாமிடத்தையும்,தமிழக காவல்துறையைச் சேர்ந்த தலைமைக் காவலர் க.பாரதி மூன்றாமிடத்தையும் பிடித்தனர். ரைபிள் 300 கஜம் ஸ்னாப் போட்டியில் உத்தரபிரதேச காவல்துறையைச் சேர்ந்த காவலர் சரோஜ் முதலிடத்தையும், தமிழக காவல்துறையைச் சேர்ந்த காவலர் சோனியா இரண்டாமிடத்தையும்,எல்லை பாதுகாப்புப் படையைச் சேர்ந்த காவலர் கஜோல் சௌத்ரி மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

டிஜிபி பரிசளிப்பு: கார்பைன் 25 கஜம் பேட்டல் கிரௌச் போட்டியில் இந்தோ - திபெத் எல்லை காவல் படையைச் சேர்ந்த காவலர் தேஜஸ்வரி முதலிடத்தையும்,தமிழக காவல்துறைச் சேர்ந்த காவலர் சுசி இரண்டாமிடத்தையும், தமிழக காவல்துறையைச் சேர்ந்த காவலர் கீதா மூன்றாமிடத்தையும் பிடித்தனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு தமிழக காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் பதக்கங்களையும், பரிசுகளையும் வழங்கி பாராட்டினார்.

மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன்

ஜூன் 21 முதல் வழங்கப்படும்

சென்னை, ஜூன் 17: மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன் ஜூன் 21-ஆம்தேதி முதல் வழங்கப்படும் என மாநகர போக்குவரத்துக்கழகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாநகர் போக்குவரத்துக் கழகம் வெளியிட்ட செய்தி:

சென்னையை சேர்ந்த மூத்த குடிமக்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன் வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி, ஜூலை முதல் டிசம்பர் வரை பயன்படுத்தக்கூடிய டோக்கன்கள் ஒரு மாதத்திற்கு 10வீதம் 6 மாதத்திற்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன்கள் 42 மையங்களில் ஜூன் 21 முதல் ஜூலை 31-ஆம் தேதி வரை காலை 8 மணி முதல் இரவு 7.30 மணிவரை வழங்கப்படும். மேலும், இம்மையங்களில் அடையாள அட்டை புதுப்பிப்பதுடன்,புதியபயனாளிகளும் தங்களுக்கான புதிய அட்டையையும் பெற்றுக்கொள்ளலாம்.

இச்சேவைகளைபெறவிரும்பும் மூத்த குடிமக்கள் தங்கள் இருப்பிட சான்றாக குடும்ப அட்டை, வயது சான்று (ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம்,கல்வி சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை) மற்றும் 2 வண்ண புகைப்படங்கள் உள்ளிட்டவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன்கள் வழங்கும் இடங்கள்: அடையாறு, பெசன்ட் நகர், திருவான்மியூர், மந்தைவெளி, தியாகராய நகர், , சைதாப்பேட்டை பேருந்து நிலையம், மத்திய பணிமனை, சென்ட்ரல் ரயில் நிலையம், பிராட்வே, குரோம்பேட்டை-1, பல்லாவரம், ஆலந்தூர், கிண்டி எஸ்டேட், அய்யப்பன் தாங்கல், வடபழனி, கே.கே. நகர், ஆதம்பாக்கம், வேளச்சேரி, அண்ணாநகர், கோயம்பேடு, அம்பத்தூர் எஸ்டேட், அம்பத்தூர் ஓ.டி., ஆவடி, அயனாவரம், வில்லிவாக்கம், தண்டையார்பேட்டை-1, சுங்கச்சாவடி, எண்ணூர், வியாசர்பாடி, எம்.கே.பி நகர், தாம்பரம் - மெப்ஸ் பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள பேருந்து நிலையங்களில், பேருந்து பணிமனைகளில் வழங்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதம்பாக்கம் மெட்ரோ ரயில் உயர்மட்ட பாதை பணிகள் தீவிரம்

சென்னை, ஜூன் 17: ஆதம்பாக்கம் மெட்ரோ ரயில் உயர்மட்ட பாதை அமைக்கும் பணி விறுவிறுப்புடன் நடைபெற்று வருகிறது.

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்துக்கான பணிகள் நடைபெற்று வரும் நிலையில், ஆதம்பாக்கத்தில் மெட்ரோ ரயிலுக்கு உயர் மட்ட பாதை அமைக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இந்த பகுதியில் ஏற்கெனவே கடற்கரை- பரங்கிமலை இடையிலான துரித ரயில் (எம்.ஆர்.டி.எஸ்) பாதை செல்வதால் அதற்கு மேலாக மெட்ரோ ரயில்பாதை அமைக்க 20 மீட்டர் உயரமான பிரம்மாண்ட தூண்களும், அதன் மேல் பாலம் கட்டும் பணிகளும் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: "இத்திட்டத்தில் ரயில் நிலையங்கள் மற்றும் பேருந்து நிலையங்களை இணைக்கும் வகையில் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்படுகிறது. மாதவரம்- சோழிங்கநல்லூர் வரையிலான வழித்தடத்தில் பரங்கிமலை, ஆதம்பாக்கம் பகுதியில் மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைய உள்ளன.

இதற்காக உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகள் வந்து செல்ல வசதியாக நகரும் படிக்கட்டுகள், நடைமேம்பாலங்கள் அமைக்கப்படும். இந்த வழித்தடத்திலுள்ள மொத்த பணிகளும் 2026-ஆம் ஆண்டுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

pnb Housing Finance Limited
Ghar Ki Baat

பதிவு அலுவலகம்: 9-ஆவது தளம், அன்டரிக்ஷ் பவன், 22, K.G. மார்க், புது தில்லி-110001
தொலைபேசி.: 011-23445200, இணையத்தளம்: www.pnbhousing.com CIN எண்.: L65922DL1988PLC033856

அலுவலக வளாக இட மாற்ற அறிவிப்பு

பெறுநர்: இதன் தொடர்புடைய அனைவரும்

பரவலாக பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் பின் வரும் அலுவலக வளாகத்தை 20 செப்டம்பர் 2024 அன்றோ அல்லது அதற்கு முன்போ இடமாற்றம் செய்யவுள்ளோம்.

தற்போதைய முகவரி

PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட், 22/1E, 1-ஆவது தளம், ஜவகர்லால் நேரு சாலை, திருவள்ளூர்-602001, தமிழ்நாடு

புதிய முகவரி (இடமாறுதலுக்குப் பிறகு)

PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட், எண்: 43/390 H, 2-ஆவது தளம், அன்னை இந்திரா காந்தி சாலை, திருவள்ளூர்-602001, தமிழ்நாடு

ஒம்/-, அதிகாரப்பூர்வ அலுவலர், PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட்

SATHYABAMA
INSTITUTE OF SCIENCE AND TECHNOLOGY
(DEEMED TO BE UNIVERSITY)
CATEGORY - 1 UNIVERSITY BY UGC



IN LOVING MEMORY OF
DR. JEPPIAAR
FOUNDER CHANCELLOR

8TH ANNIVERSARY REMEMBRANCE

An Icon of Educational Empowerment, a Social Reformer, Founder, and Ever Inspirational Leader to All of Us

THE MANAGEMENT, STAFF, STUDENTS & ALUMNI OF SATHYABAMA INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY, SALUTE OUR VISIONARY FOUNDER ON HIS EIGHTH ANNIVERSARY REMEMBRANCE

www.sathyabama.ac.in

எல்&டி பைனான்ஸ் லிமிடெட்
(முந்தைய பெயர் எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்)
பதிவு அலுவலகம்: எல்&டி பைனான்ஸ் லிமிடெட் பிருந்தாவன் பில்டிங், ஃபிளாட் நம்பர் 177, சிஎஸ்டி ரோடு, கலினா, சாந்தாக்ருஸ் (ஈஸ்ட்), மும்பை - 400 098;
சிஐஎன் நம்பர்: L67120MH2008PLC181833
கிளை அலுவலகம்: சென்னை

L&T Finance

அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்கான பொது ஏலம்

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிடைசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் 2002 (54 ஆஃப் 2002) கீழ் மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் அவருக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்தை **"இருக்கும் இடம்"** மற்றும் **"இருக்கும் நிலை"** என்ற அடிப்படையில் **"பொது ஏலம்"** மூலம் கடன் பாக்கி மற்றும் அது சம்பந்தமான கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்களை வசூலிக்க ஏலம் விட உள்ளார்.

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்	பிணைய சொத்து முகவுரி	கடன் கணக்கு எண்	சொத்து வைக்கப்படுத்தப்பட்டது	ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அல்லது அதிகம் (₹)	13.06.2024 அன்று பஞ் மொத்தம் நிலுவை பாக்கி தொகை	ரிசர்வ் விலை (₹)	ஆய்வு தேதி	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்
1. பிரான்சிஸ் அந்தோனி டி 2. மஞ்சு பாரகவி	சொத்தின் முகவுரி - ஸைட் எண் 203 சூப்பர் பில்டப் பகுதி 1603 சதுர அடி. எட்டிடத்தின் 2வது தளம், பிளாக் எண் A-17 என பெயரிடப்பட்டது. எடிஸ்ட் தளத்தில் கார் நிறுத்துவதற்காக இடம் ஒதுக்கப்பட்டு பயன்பாட்டு உரிமையுடன் கூடியது. நெடுங்குன்றம் கிராமம், தாம்பரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் (முன்பு செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்) எஸ்என்எம் நகர், வீட்டு வளாகம், மொப்பேடு புதூர் சாலை, ஆளப்பாக்கனு பெருங்களத்தூர், சென்னை 600063, -ல் அமைந்துள்ளது. சென்னை-தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் துணை மாவட்டத்திற்குள் உள்ளது.	H0086609 10200257 05 & H0086609 10200257 05L & H0086609 10200257 05G	25 மே, 2024	ரூ. 5,48,136	ரூ. 53,89,202.98/-	ரூ. 54,81,360	முன் அப்பாயிண்ட் மெண்ட் உடன் அனைத்து பணி நாட்களிலும்	20-07-2024 காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. மின்னணு ஏல விற்பனை, சர்ஃபேஸி சட்ட பிரிவுகளின் கீழ் மற்றும் பொது மின்னணு ஏல முறை மூலம் https://sarfaesi.E-auctiontiger.net இணையதளம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆன்லைனில் நடத்தப்படுகிறது.
2. இங்கே மேலே குறிப்பிடப்பட்ட நாள் அன்று மற்றும் நேரத்தில் பொது மின்னணு ஏலம் நடத்தப்படும், மேலே குறிப்பிடப்பட்ட பிணை சொத்து **"எங்கே உள்ளது என்பதன் அடிப்படையில்"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளது என்பதன் அடிப்படையில்"** விற்கப்படும்.
3. பொது மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்காக, உத்தேசித்துள்ள வாங்குபவர்கள் / ஏலதாரர்கள் ஏல படிவத்தை, திருப்பியளிக்கத்தக்க பிணை சொத்தின் ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அதனுடன் பான் அட்டை, நிறுவனம் என்னும் நிலையில் குழு தீர்மானங்கள் மற்றும் முகவரிச் சான்று நகல்களை 19/07/2024 அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.
4. பொது மின்னணு ஏலத்தில் வெற்றி பெற முடியாத இதர அனைத்து ஏலதாரர்களின் பிணை உறுதிப் பணம் வைப்பு தொகை பொது மின்னணு ஏலம் முடிவுற்ற 7 நாட்களுக்குள்ளாக LTFல் திருப்பி அளிக்கப்படும். பிணை உறுதிப் பணம் வைப்பு தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
5. மின்னணு ஏலத்தில் வெற்றி பெறும் வாங்குபவர்/ஏலதாரர் அவரது/அதன் ஆஃபரில் 25% தொகையை (இஎம்டி உட்பட) எல்&டி பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்கதாக டி.டி./பே. ஆர் மூலம் 20/07/2024 தேதி அன்று 18.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு அதாவது ஏல தேதி அன்று அல்லது அடுத்த அலுவல் நாளில் அதாவது 22/07/2024 அன்று செலுத்தப்பட்டு அந்த டெபாசிட் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதாக எல்&டி பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். இல்லையெனில் விற்பனை தோல்வி அடைந்து விட்டதாக கருதப்பட்டு வெற்றி பெற்ற ஏலதாரரின் இஎம்டி பறிமுதல் செய்யப்படும். வாங்கும் விலையில் மீதி தொகை அதாவது 75% வாங்குபவரால் எல்&டி பைனான்ஸ் லிமிடெட்டுக்கு, அரசுசார் சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட பின் பதினைந்தாம் நாள் அன்று அல்லது அதற்கு முன்பாக அல்லது சட்டப்பிரிவுகளின்படி இத்தகைய நீட்டிக்கப்படும் காலவரம்பிற்குள் செலுத்தப்பட வேண்டும்.
6. சொத்து ஆய்வு செய்வதற்காக அல்லது அதிக தகவலுக்கு, வாய்ப்புள்ள ஏலதாரர்கள், அங்கீகாரம்பெற்ற அதிகாரியுடன் தொடர்பு கொள்ளலாம், அதாவது **பெயர் - திருவேங்கடம் ஆர், தொர்பு எண் 9884044290 மற்றும் சந்தோஷ் திவாரி, தொடர்பு எண் 9920490126, எல்&டி ஃபைனான்சியல் சர்வீஸஸ் லிமிடெட், அலுவலகம் : வெது தளம், பிருந்தாவன் பில்டிங், பிளாட் எண் 177, கலினா, சிஎஸ்டி ரோடு, மார்டெல் ஷோரூம் அருகில், சாந்தாக்ருஸ் (கிழக்கு) , மும்பை - 400098.** இ- ஏலத்தின் எந்த நிலையிலும், அங்கீகாரம்பெற்ற அதிகாரி எந்த காரணத்தையும் குறிப்பிடாமல் மற்றும் எந்த முன் அறிவிப்பும் இன்றி, எவற்றை ஏற்கலாம்/ நிராகரிக்கலாம்/ திருத்தலாம்/ ஏலத்தை/விலகலை ரத்து செய்யலாம் அல்லது தள்ளிப் போடலாம்.
7. வெற்றி பெற்ற வாங்குபவர்/ஏலதாரர் சொத்தை தன்னுடைய பேரில் சாதகமாக மாற்றிக்கொள்ள பொருந்தும் சட்டத்தின் படி, ஏதேனும் சட்டபூர்வ நிலுவைத் தொகைகள், வரிகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள், முத்திரை வரி, பதிவு கட்டணங்கள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
8. மேற்கண்ட பாக்கித் தொகைகளுக்கு பொறுப்பான வாங்குபவர்/உத்தரவாதிகள் இந்த விற்பனை அறிவிப்பை, பொது மின்னணு ஏல விற்பனையை நடத்த, செக்யூரிடி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மெண்ட்) சூல்ஸ் விதி 8(6) கீழ் ஒரு அறிவிப்பாக கருதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
9. கடன் வாங்குபவர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) மேலே குறிப்பிட்டபடி கடன் நிலுவையில் உள்ள முழு நிலுவைத் தொகையையும் மேற்கூறிய மின்னணு ஏலத் தேதிக்கு முன்னர் செலுத்தும்படி கேட்கப்படுகின்றனர். அவ்வாறு செலுத்தத் தவறினால், எல்&டி பைனான்ஸ் லிமிடெட், சர்ஃபேஸி சட்டம், 2002 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சொத்தை விற்கும்.
10. கடன்தாரர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) / பொது மக்கள் எல்&டி பைனான்ஸ் லிமிடெட் இடும் முன்னரே எழுத்துப்பூர்வமான அனுமதி பெறாமல் சம்பந்தப்பட்ட பிணைய சொத்துக்களை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் மற்றும் இதர நடவடிக்கைகளை கையாள்வதில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர்.

தேதி: 18.06.2024
இடம்: சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி பைனான்ஸ் லிமிடெட்